With the support of GOVERNMENT OF TAMIL NADU

# DAILY BUZZ

16th Chennai International Film Festival

18th Dec 2018

Dec 16 being a Sunday was a rather very busy and super crowded day at CIFF! The movie halls were all packed to the maximum! It is really very encouraging for all of us from the CIFF team to see such an amazing response for the festival and we would like to thank each one of you who are making CIFF a grand success…

The much awaited and one of the star movies at the film festival this year was DOGMAN and it was screened at Devi Theatre at 4:30 pm yesterday. It was an instant hit and people totally loved the movie (as shared by the viewers). The other movies that did well yesterday were Yomeddine (Egypt), The Sound Story (India - Bilingual), Vada Chennai (India – Tamil), The Wild Pear Tree (Turkey) and Nina (Poland).

## Best Picks of Dec 18

1. Blue My Mind (Devi | 02.00pm)
2. Cold War (Devi | 04.30pm)
3. Smuggling Hendrix (Devi Bala | 07.30pm)
4. Bhor (Russian Cultural Centre | 10.00pm)
5. Dressage (Casino | 12.15pm)

## Tête-à-tête with Mr. Resul Pookutty



Mr. Resul Pookutty, the Oscar winner for 'Slumdog Millionaire' was at the 16th Chennai International Film Festival for the Indian Premiere of his film 'The Sound Story'! I (Divya Jay) managed to steal a few minutes from his busy schedule to learn about his journey from being a Physics grad to becoming the Best Sound Mixing person and winning an Oscar award and made all Indians proud…

*Me: How and when did you decide that you wanted to get into Sound Mixing?*

*Mr. Resul Pookutty:* (Smiles)… To be honest with you, Sound Mixing happened to me by sheer accident! When I was at college where learning Physics, all I knew was that I wanted to specialize in superconductivity and win a Nobel Price for my country! But as it is rightly said Man Proposes & God disposes!

I was told about a Sound Mixing course (at Film and Television Institute of India) by one of my friends and I decided to take it up. I thought it would become an extension of the BSc Physics that I had completed. Sadly when I applied for the first time, I didn't qualify for the course. But then this process got me real interested in watching and understanding the world of cinema. I found my calling for cinema now and I am really glad that I decided to follow my heart and go on with my calling…

I didn't give up and decided to apply for the course again and meanwhile took up a law course in Trivandrum and I made sure to be part of every artistic movement parallelly. I even started exploring and understanding the technical know-how of sound mixing. Because of all this homework that I did, the 2nd time when I applied I got selected for the Sound Mixing course! And to add to it, I got the First Rank and studied with Full Scholarship! After all, following my Heart is what kept me going all the time…

*Me: Is there a message that you would like to pass on to youngsters pursuing Sound Mixing?*

*Mr. Resul Pookutty:* There is no shortcut to Success in life… Perseverance, stability and hardwork are the 3 most important things in a person's life that can take you wherever they wish to go… Keep this mind in and your dreams will come true!

*Me: What are your current and future plans in your professional life?*

*Mr. Resul Pookutty:* I am just done working on the movie, 2.0 starring Superstar Rajinikanth and directed by Mr. Shankar. We have introduced a new format in the movie called SRL 4D (Shankar, Resul, Lyka)! It's the first-of-its-kind and it makes me feel immensely happy and proud…

This format is being introduced to the world exactly 10 years after I won the Academy Award for Best Sound Mixing in the movie 'Slumdog Millionaire' along with Richard Pryke and Ian Tapp.



It also gives me joy in telling you that my movie 'The Sound Story' is in the run for the prestigious Oscars as I am talking to you right now! As I look back on my life till now I feel really happy for the way life has been treating me…

*Me: Wishing you the best of everything that life can give and hoping that you continue to make India proud with your amazing talent and creativity. Best Wishes…*

**-Divya Jay**

# Screening Schedule

## Day 6 | Tuesday, 18.12.18

**Change in Schedule**

**ETERNAL WINTER will be screened in place of THE REPORTS ON SARAH AND SALEEM at ANNA Theatre -18th Dec 04.30 pm**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Devi** | 11.00 a.m. The Wild Pear Tree (Ahlat Agaci) Dir.:Nuri Bilge Ceylan Turkey\|2018\|188' -WC | 2.00 p.m. Blue My Mind Dir.:Lisa Brühlmann Switzerland \|2018\|97'-WC | 4.30 pm Cold War (Zimna wojna) Dir.:Pawel Pawlikowski Poland\|2018\|88'-WC | 7.00 p.m CLIMAX Dir.: Gaspar Noé France \|2018\| 96'-WC | No Screening |
| **Devi Bala** | 10.45 AM Averno Dir.: Marcos Loayza Bolivia \| 2018 \| 87'-WC | 1.00 PM Al Asleyeen Dir.:Marwan Hamed Egypt\|2017\| 125'-WC | 3.30 PM THE SEEN AND THE UNSEEN (Sekala Niskala) Dir.:Kamila Andini Indonesia\|2017\|83'-WC | 5.30 PM Killing Jesus (Matar a Jesús) Dir.:Laura Mora Ortega Colombia \|2017\| 95'-WC | 7.30 PM Smuggling Hendrix Dir.: Marios Piperides Cyprus \|2018\| 93'-WC |
| **Russian Cultural Centre** | 10.00 AM Bhor Dir.: Kamakhya Narayan Singh Hindi\|2018\|93' -IP | 12.00 Noon Merku Thodarchi Malai Dir.: Leninbharati 2018 \| India \| 122' -SS | 01.30pm No Screening | 03.00pm Kadaikutty Singam Dir.: Pandiraj 2018\|147'\| Tamil -TFFC | 6.00 PM Mercury Dir.: Karthik Subbaraj 2018\|108'\|Tamil -TFFC |
| **Anna Theatre** | 09.30 AM Sofia Dir.: Meryem Benm'Barek-Aloïsi France\| 2018\|80'-WC | 12.00 noon The Heiresses (Las herederas) Dir. :Marcelo Martinessi Paraguay\| 2018 \|98'-WC | 02.30 PM The Insult (L'insulte) Dir.:Ziad Doueiri France\|2017\| 113-WC | 04.30pm The Reports on Sarah and Saleem Dir.: Muayad Alayan Palestine \| 2018\|127'-WC | 7.15 p.m. AT WAR (En guerre) Dir.:Stéphane Brizé France \|2018\|113'-WC |
| **Casino** | 9.45 a.m. The Man with the Magic Box (Czlowiek z magicznym pudelkiem) Dir.:Bodo Kox Poland\|2017\|103'-WC | 12.15 Noon Dressage Dir.: Pooya Badkoobeh Iran\|2018\| 95'-WC | 2.45 p.m. Mug (Twarz) Dir.:Malgorzata Szumowska Poland\|2018\|91' | 04.45 p.m. 3 Faces(Se rokh) Dir.:Jafar Panahi Iran\|2018\|100'-WC | 7.00 p.m. Yomeddine Dir.: A.B. Shawky Egypt\|2018\|97' |
| **NFDC Tagore Film Centre** Capacity 100 seats | No Screening | | 2.00 PM The Edge of Heaven (Auf der anderen Seite) Dir.:Fatih Akin Germany\|2007\|122'-RFA | 04.00 PM Where The All Roads End (Donde acaban los caminos) Dir.:Carlos García Agraz Guatemala\|2004\|82'-FFG | No Screening |

Tamil Feature Film Competition: TFFC | Indian Panorama: IP | World Cinema: WC | Contemporary Films from Australia-CFFA | Contemporary Films from Germany -CFFG | Country Focus Brazil : CFB | Retrospective-Fatih Akin: RFA | Australian Comedy : AC | Films from Grulac: FFG

**Seating for all shows will be on first come first served basis**

## Reaction from the Audience

I have been part of CIFF and ICAF for 5-6 years now and love watching world cinema. They screen some of the best movies from across countries. I love watching Spanish movies since I am learning the language and find ICAF to be a good place to watch Spanish cinema and improve Spanish. I am really happy to be part of CIFF and ICAF. Dogman, Shoplifters, Dayan and Hattrick are some of my favourite movies from the festival till now. Great work Thangaraj Sir and team… Wish CIFF 2018 a grand success!

**Divya, Film Critic and Writer, Visakhapatnam**

CIFF is a breath of fresh air for all the film enthusiasts. I'm out of my film school for a year now, I have learnt so many things out of the two festivals I have attended so far. You get to witness the technical brilliance, conceptual excellence that film makers all around the world do. The event is also organised well with proper communication and allotment of good screens. Best wishes for CIFF 2018!

**Mohan, Assistant Cinematographer, Coimbatore**

## At War

Anna | 07.15pm



**Picks of the Day**

At war is a French drama directed by Stéphane Brizé. Movie is about a working class man whose world is turned upside down when the factory he works decides to shutdown its operations and relocate to Romania, where they can pay workers a fraction of current wages. Laurent and his co-workers go on strike and take their case to the French government, hitting brick walls of empty rhetoric at every turn.

The movie won 2 awards and nominated 3 times!

## Pic Corner

**Photos by CyberjoeantoClicks & L.Srinivasan**








# மக்களுக்கான மகத்தான சினிமா

**ரஷிய கலாச்சார மையம், 12.00 மணி**



சுமைதூக்கிகளாக மலைக்கும் அடிவாரத்திற்கும் வந்து போகும் மக்களின் வாழ்க்கையை துல்லியமாகவும், நுட்பமாகவும், பாசாங்கு இல்லாமலும் பதிவு செய்துள்ள படம் 'மேற்குத்தொடர்ச்சி மலை'.

கதை, கதாபாத்திரத் தேர்வு, பாத்திர வார்ப்பு, திரைக்கதை என ஒவ்வொன்றையும் பகுத்துப் பார்த்துச் சொல்ல முடியாத அளவுக்கு அனைத்தும் ஒன்றோடு ஒன்று பிணைந்தும் இணைந்தும் கிடப்பதே படத்தின் ஆகச் சிறந்த பலம். படத்தில் நாயகன் இருக்கிறார். அதற்காக அவரை மையமாகக் கொண்டு மட்டுமே படம் நகரவில்லை. கதை மட்டும் அல்ல, நிறைய கதைகள் படத்தில் உள்ளன.

ஏலக்காய் மூட்டையை தலையிலும், தோளிலும் சுமந்தபடி மலையிலிருந்து அடிவாரப் பகுதிக்கு கொண்டு சேர்க்கும் வேலையைச் செய்கிறார் ரங்கசாமி (ஆண்டனி). காணி நிலத்தையாவது வாங்கிவிட வேண்டும் என்பதற்காக ஓய்வில்லாமல் உழைக்கிறார். நிலம் வாங்கிய பிறகுதான் திருமணம் என்று வைராக்கியத்துடன் வாழும் ரங்கசாமியை அதிகாரமும் அரசியலும் சதி செய்து சிறைக்குள் தள்ளுகிறது. தான் வாங்கிய நிலத்துக்கே காவலாளியாக வேலை பார்க்கும் கொடூர சூழலுக்குத் தள்ளி வேடிக்கை பார்க்கிறது காலம். இது ஏன் நிகழ்கிறது, ரங்கசாமி கனவு தகர்ந்து போக யார் காரணம், மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் எப்படிப் பறிபோகிறது போன்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

நாயகன் ரங்கசாமி என்றாலும், படம் முழுக்க விரவிக் கிடக்கும் ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஒரு கதை உள்ளது. அதில் வைராக்கியம், அன்பு, சோகம், இழப்பு என சர்வமும் அடங்கிவிடுகிறது. தலையில் தூக்காமல் கழுதையின் மீது ஏலக்காய் மூட்டைகளைக் கிடத்தி மலையிலிருந்து அடிவாரம் நோக்கிச் செல்லும் மூக்கையாவைப் பரிகாசம் செய்கிறார் வனகாளி.முதலாளி மூட்டையை இறக்க ஆளில்லாமல் தவித்ததற்காக பெருமழை என்றும் பாராமல், பாதை இன்னதென்று புலப்படாமல் இருந்த போதும் மலையில் இருந்து தலையில் மூட்டையைச் சுமந்து அடிவாரத்துக்கு கொண்டு சேர்த்த கதையை ஒற்றைக் குரலில் கம்பீரமாகச் சொல்கிறார் வனகாளி. ரத்த வாந்தி எடுத்த பிறகும் தன் மூட்டையை தானே சுமப்பேன் என பிடிவாதம் பிடிக்கும் அவர் இறுதியில் அந்த மூட்டையுடன் சரிகிறார்.

தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவே ஓயாமல் போராடும் தூய்மையான, நேர்மையான கம்யூனிஸ்ட்டாக இருக்கும் சாக்கோவின் கதாபாத்திரம் கம்பீர வார்ப்பு. இயக்கத்தின் மூத்த தோழர் முதலாளியின் சொல்பேச்சு கேட்டு, தொழிலாளர்களுக்கு எதிராகச் செயல்படும்போது சாக்கோவின் எதிர்வினை அதீதமாக இருந்தாலும் மக்கள் தலைவனுக்கான குணநலன்களைப் பிரதிபலிக்கின்றன. மூணு ஏலக்காய் முந்நூறு மல்லிகைப்பூ என்று யார் கிண்டல் செய்தாலும் பொறுத்துக்கொள்ள முடியாமல் கையில் கிடைத்ததை வைத்து அடிக்கும் கங்காணி பின் அதே வசனத்தைச் சொல்லி இனி என்னை யார் அழைப்பார் என்று கலங்கும்போது மனதைப் பிசைகிறார்.

மகள் திருமணத்துக்காக மகிழ்ச்சியுடன் மலை இறங்கி வரும் தம்பதியரில் கணவனை யானை மிதித்துக் கொன்று விட, சில்லறைப் பணமும் சிதறிப் போக மன பாதிப்புக்குள்ளாகி சில்லறைகளைத் தேடி அலையும் கிறுக்குக் கிழவி, தனக்கென்று இருக்கும் ஒரே ஆதரவான பேத்தியின் வாழ்வுக்காக மலையடிவாரத்தில் டீக்கடை மற்றும் ஹோட்டல் நடத்தும் பாக்கியம் அம்மாள், ஒண்ணுமில்லாமல் அந்த ஊருக்குப் பிழைப்பு தேடி வந்து ரியல் எஸ்டேட்டில் உச்சம் தொடும் லோகு, தானாகவே முன்வந்து கடன் கொடுக்கும் மீரான் பாய், ரங்கசாமியின் நலனுக்காக முதலாளியிடம் பரிந்து பேசும் கணக்குப்பிள்ளை சுடலை, ரங்கசாமியுடனே வலம் வரும் கேத்தர, அதிகாரத் திமிரைக் காட்டும் ஆறு பாலா என படம் முழுக்க வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரின் கதையும் படத்துடன் ஒன்றிப் போகிறது.


ரங்கசாமியாக நடித்திருக்கும் ஆண்டனியின் உடல்மொழியும், தோற்றமும் தொழிலாளியின் சகல துயரங்களையும் கண்முன் நிறுத்துகிறது. அசாதாரண சூழலில் யோசிக்காமல் இரு கொலைகள் நிகழ அவசரப்பட்டுவிட்டோமோ என்ற ஆற்றாமையை வெளிப்படுத்துவதுமாக ஆண்டனி கதையின் நாயகனாக மிளிர்கிறார். அத்தை மகன் ரங்கசாமியைப் பார்க்க வேண்டும் என்பதற்காக டீ போட்டுக் கொடுத்தவுடன் சீனி இருக்கிறதா என்று வெட்கமும் சிரிப்புமாகக் கேட்கும் ஈஸ்வரியின் கதாபாத்திரம் தமிழ் சினிமா அரிதாகக் காட்டும் யதார்த்த நாயகியின் பிம்பம்.

கங்காணியாக நடித்திருக்கும் ஆண்டனி வாத்தியார், வனகாளியாக வாழ்ந்த பாண்டி, அடிவாரம் பாக்கியமாக நடித்திருக்கும் சொர்ணம், ரியல் எஸ்டேட் லோகுவாக நடித்திருக்கும் அரண்மனை சுப்பு, சாக்கோவாக நடித்திருக்கும் அபு வளையங்குளம் ஆகியோர் நிச்சயம் தமிழ் சினிமாவின் நல்வரவுகள்.

வசனகர்த்தா ராசி.தங்கதுரை சினிமாவின் மொழியில் வசனங்களை எழுதாமல் மக்களின் வாழ்க்கையிலிருந்து வார்த்தைகளை வடித்திருக்கிறார். தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவும், இளையராஜாவின் இசையும் படத்துக்கு ரத்தமும் சதையுமாய் உயிர் கொடுக்கிறது. அந்தரத்தில் தொங்குதம்மா ஏழையின் வாழ்க்கை பாடல் மூலம் இளையராஜா கண்ணீர் வரவழைக்கிறார்.

மேற்குத்தொடர்ச்சி மலை மீது வாழ்கின்ற நிலம் அற்ற உழைக்கும் மக்களின் கதையை இவ்வளவு வலுவாகவும் ஆழமாகவும் அழுத்தமாகவும் சொல்லியிருக்கும் இயக்குநர் லெனின் பாரதி மிக முக்கியமான இயக்குநராக மிளிர்கிறார். எளிய மக்களின் வாழ்க்கை எப்படி சூறையாடப்படுகிறது என்பதை சமரசம் இல்லாமல் பதிவு செய்திருக்கும் அவரது கலைத்தாகம் வியக்க வைக்கிறது. முற்றிலும் புதுமுகங்களையே நடிக்க வைத்து கதாபாத்திரத் தேர்வில் கச்சிதம் காட்டியிருப்பது சிறப்பு. சமகால அரசியல், மலையை நம்பிய மக்களின் வாழ்நிலை, அரசியல் சதி என அத்தனையையும் அம்பலப்படுத்திய விதத்தில் மக்களுக்கான சினிமாவை, மக்கள் குறித்த மகத்தான சினிமாவைப் படைத்திருக்கிறார்.

மேற்குத்தொடர்ச்சி மலை திரைப்படத்தைத் தயாரித்ததற்காக விஜய் சேதுபதி காலம் முழுக்க பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.



க.நாகப்பன்

# கலையும் கமர்ஷியலும்: CIFF-ல் புஷ்கர் - காயத்ரி பகிர்வின் 5 அம்சங்கள்!

இயக்குநர்கள் புஷ்கர் - காயத்ரி உடன் சென்னை சர்வதேச திரைப்பட விழா பார்வையாளர்கள் நடத்திய கலந்துரையாடலில் பல்வேறு தகவல்களும் அனுபவங்களும் பகிரப்பட்டன. புஷ்கர் - காயத்ரி பகிரந்தவற்றின் 5 அம்சங்கள்:

“ சினிமா எதையும் சாராமல், பொதுவாக இருக்கவேண்டும். கமர்ஷியல் படங்களையும், கலைப் படங்களையும் கையாள்வதில் சமநிலைத் தன்மை வேண்டும். இந்தத் தன்மைகளுடன் தமிழில் கலைப்படங்களை இயக்குவதில் கமல்ஹாசன், வெற்றிமாறன், பா.ரஞ்சித் சிறந்து விளங்குகின்றனர்."

" சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்துரையாடல் மூலம் நம்மால் படத்தில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், கூறப்பட்ட கருத்துக்கள் போன்றவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. "பெர்லின், வெனிஸ் போன்ற சர்வதேச திரைப்பட விழாக்களில் படங்கள் திரையிடப்படுதல் மட்டுமல்லாது பிறநாட்டவர் அப்படத்திற்கான வெளிநாட்டு வியாபாரத்தையும் மேற்கொள்வர். திரைப்பட விழாக்கள் பொருளாதார வணிகத்தையும் மேற்கொள்ளும். இதன்மூலம் வெளிநாட்டு பிரதிநிதிகளின் நட்புறவு கிடைக்கும், அது மிகவும் முக்கியமானது.”


" நாங்கள் இயக்கிய படங்கள், கலை நயத்துடன் கமர்ஷியல் கன்டென்டுகளையும் கொண்டு நடுநிலையில் பொருந்தும். இது அனைத்து தரப்பு மக்களிடமும் போய் சேரும். தமிழ் சினிமாவை பொறுத்தவரை, படக்குழுவினர் பொருளாதார ரீதியாக வெற்றி பெறவே விரும்புவர். பெங்காலி போன்று ஆழ்ந்த கருத்துக்களுடன் படம் எடுக்க தயங்குவர். வெற்றிமாறனின் 'விசாரணை' திரைப்படம் சர்வதேச விழாக்களில் புகழ்பெற்றது மட்டுமல்லாமல், வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்றது.

" தமிழ் சினிமாவில் பொருளாதார ரீதியாக வெற்றி பெறாது என்பதனால் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்குகொண்டு அந்த விளம்பரத்துடன் பிறகு வெளிவந்து வசூல் புரிகிறது என்று பொய்யான நம்பிக்கை கடைபிடிக்கப்படுகிறது. ஆனால், வெளிநாட்டுக்கு அனுப்புவது மிகுந்த செலவுக்குரியது. எளிதாக அனுப்பி பாராட்டுக்களை பெற்றுவிடமுடியாது."



"ஒரு கமர்ஷியல் சினிமா எடுக்க வேண்டும் என்றால்தான் நாம் வசூலை நம்பி வருந்த வேண்டும். கலைநயப் படங்கள் எடுக்க வேண்டும், கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர வேண்டுமென்றால், இன்று நிறைய சமூக வலைதளங்கள் இருக்கின்றன. யூடியூப் தளத்தில் வெளியிட்டு அதை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டால் மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்ற முடியும். நாம் எதற்காக படம் எடுக்கிறோம் என்பதுதான் இயக்குனருக்கு முக்கியமான கேள்வி."

சுப்ரமணி



## இன்று என்ன படம் பார்க்கலாம்?

- ராம்ஜி பரிந்துரைகள்

### COLD WAR / ZIMINA WOJNA | POLAND | 2018

தேவி, மாலை 4.30 மணி



சோவியத் அணி நாடுகள் மற்றும் மேற்கத்திய சக்திகளுக்கு இடையில் நிலவிய விரோதப் போக்கை 'கோல்ட் வார்' என்று அழைக்கின்றனர். இக்காலகட்டத்தில்தான் இப்படத்தின் கதை நடைபெறுகிறது. இருவேறு வாழ்வியல் பின்னணி கொண்ட இருவருக்கிடையே காதல் உருவாகிறது. அக்காதல் நிறைவேறியதா இல்லையா என்பதை மிக அழகான திரைக்கதையில் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் சிறந்த இயக்குநருக்கான விருதை கேன்ஸ் திரைப்படவிழாவில் பெற்றுள்ள படம். 15 விருதுகள். 24 பரிந்துரைகள் பெற்றுள்ளன.

### THE SEEN AND THE UNSEEN / SEKALA NISKALA

தேவிபாலா, பிற்பகல் 03.30 மணி



1 0 வயதான தந்த்ரி என்ற சிறுமி, தன்னுடன் பிறந்த இரட்டைச் சகோதரனான தந்த்ரா நீண்ட நாட்கள் தன்னுடன் இருக்க மாட்டான் என்பதை உணர்கிறாள். தந்த்ராவின் மூளை வலுவிழக்கத் தொடங்கி, அவனுடைய எல்லா உணர்வுகளும் ஒன்றன்பின் ஒன்றாக அழிந்து வருகின்றன. அவன் பெரும்பான்மையான நேரத்தைப் படுக்கையிலேயே கழிக்க, விரைவில் தனியாக இந்த வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து கொள்கிறாள் தந்த்ரி. உண்மைக்கும் கற்பனைக்கும் இடையிலான இழப்பு மற்றும் நம்பிக்கையைத் தன்னுடைய உடல் மொழி மற்றும் தன்னைக் கண்டடைதல் மூலம் மாயப் பயணத்தை அடைகிறாள் தந்த்ரி. பெர்லின் திரைப்பட விழாவில் சிறந்த படத்திற்கான விருதைப் பெற்ற படம். 6 விருதுகள் மற்றும் 10 பரிந்துரைகளை இப்படம்பெற்றுள்ளது.

### THE HEIRESSES / LAS HEREDERAS | PARAGUAY

அண்ணா, பகல் 12.00 மணி

6 0 வயதைக் கடந்த இரு பெண்கள், தங்களுடைய பணக்கார குடும்பங்களிலிருந்து பிரிந்து 30 ஆண்டுகளாக ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருகின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் இருவருக்கும் கடுமையான நிதி நெருக்கடி ஏற்படவே, தங்களுடைய உடைமைகளை இழக்க ஆரம்பிக்கின்றனர். கடன் காரணமாக, இருவரில் ஒரு பெண் மோசடி புகாரில் சிறைக்கு செல்ல நேரிடுகிறது. அதன்பிறகு, மற்றொரு பெண் அங்குள்ள பணக்கார வயதான பெண்களுக்கு டாக்ஸி ஓட்டி வருமானம் ஈட்டுகிறார். பல ஆண்டுகளாக தன் தோழியின் அரவணைப்பிலும் ஆதரவிலும் இருந்த அவர், புதிய மனிதர்களுடன் பழகுவதன் மூலம் தன்னையே கண்டுணர்கிறார். சிறந்த திரைப்படத்திற்கான விருதை உலகெங்கிலும் பல்வேறு திரைவிழாக்களில் அள்ளிக் குவித்த படம். 31 விருதுகள் 25 பரிந்துரைகள் பெற்ற படம்



### DRESSAGE | IRAN | 2018


கேஸினோ, பகல் 12.15 மணி



ஈரானில் இன்று இளைஞர்களின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டும் கதை. டெஹ்ரான் நகரை சேர்ந்த 16 வயது பெண் கோல்ஸா. நண்பர்களோடு சேர்ந்து கொண்டு கடைகளில் திருடுபவள். அவள் திருடுவது ஒரு த்ரிலிங்கான அனுபவத்திற்காகத்தான். மற்றபடி பேராசை எண்ணமெல்லாம் இல்லை. ஒரு முறை திருடும்போது கண்காணிப்பு கேமராவை அகற்ற மறந்து விடுகிறார்கள். அடுக்கடுக்கான சம்பவங்களால் கோல்ஸா பெறும் அனுபவங்கள் அவளுக்கு நிறைய பாடங்களைக் கற்றுத் தருகிறது., பெர்லின் திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்திற்கான விருதைப் பெற்ற படம். 2 விருதுகள் 3 பரிந்துரைகளைப் பெற்றுள்ளது.

### WHERE THE ALL ROADS END | GUATEMALA

தாகூர் திரைப்பட மையம், மாலை 04.30 மணி



டாக்டர் ஸமோரா என்பவர் தொலைவில் உள்ள நகரத்திலிருந்து தன் டாக்டர் தொழிலைச் செய்ய ஒரு கிராமத்துக்கு வருகிறார். அங்கு பூர்வக்குடி மக்களுக்கும் லேடினோ மொழி பேசும் மக்களுக்கும் இடையெ கடும் பாகுபாடு நிலவுவதைப் பார்க்கிறார். ஆனால் டாக்டர் இதைப் பற்றி கவலைப்படவில்லை. இப்படியிருக்கையில் கிராமத்தில் டைபஸ் தொற்றுநோய் பரவுகிறது. அப்போது பூர்வக்குடி இனத்தைச் சேர்ந்த 17 வயது மரியா என்ற பெண்ணைச் சந்திக்கிரார், இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. இவர்கள் இருவரது காதல் விவகாரம் ஊரில் பரவ டாக்டருக்கு பிரச்சினைகள் தொடங்குகின்றன. மரியாவையும் அவர்கள் சமூகம் ஒதுக்கி வைத்து விடுகிறது.. இனி என்ன?... இத்திரைப்படம் ட்ரியெஸ்ட் திரைப்படவிழாவில் சிறந்த படத்திற்கான விருது பெற்றது.

### YOMEDDINE | EGYPT | 2018

கேஸினோ, மாலை 07.00 மணி

" யோமிடைன்" என்பது அரபி மொழியில் தீர்ப்பு வழங்கப்படும் நாள் என்று பொருள். கதையின் நாயகன் பெயர் பேஸ்ஹே. எகிப்து நாட்டில் நடக்கும் கதையாகும். பேஸ்ஹே தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர். சிறுவயதில் இருந்தே தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழும் பகுதியில் பேஸ்ஹே இருந்தவர். தனது மனைவி மறைவுக்குப்பின் அந்த இடத்தில் வாழ பேஸ்ஹேவுக்கு பிடிக்கவில்லை, இழந்த தனது குடும்பத்தினரை சந்திக்கப் புறப்படுகிறார்.ஒரு கழுதை பூட்டப்பட்ட வண்டியில் தன்னுடைய பொருட்களை எடுத்துக்கொண்டு வேறு இடம் நோக்கி முதல்முறையாக புறப்படுகிறார். அப்போது ஒபாமா என்ற ஆதரவற்றச் சிறுவன் பேஸ்ஹேவுடன் சேர்கிறான். இருவருக்கும் இடையே உருவாகும் நட்பும், அதன்பின் பேஸ்ஹே தனது குடும்பத்தினரை தேடிக் கண்டுபிடித்தாரா என்பதுதான் மீதமுள்ள கதையாகும். எகிப்து நாட்டின் பாலைவன, வெயில், பிரமீடுகள், மக்களின் வாழ்க்கை முறை தெளிவாகத் தரப்பட்டுள்ளது. குறிப்பாக தொழுநோயால் பாதிக்கப்பட்டு, குணமடைந்தவரை உண்மையாக நடிக்க வைத்திருப்பது படத்தின் சிறப்பாகும்.இப்படம் ஆஸ்கர் விருதுக்காக சிறந்த வெளிநாட்டு படப் பிரிவில் போட்டியில் பங்கேற்றது. கேன்ஸ் திரைவிழாவிலும் சிறந்த படத்திற்கான 'பாம் டி ஓர்' விருதுதேர்வு பட்டியலில் இடம்பிடித்தது



## Our Sponsors and Partners

AWARD SPONSOR
SATHYABAMA
SPONSORED BY
TVS
Kalyanamalai
MEDIA PARTNER
THE HINDU
HOSPITALITY PARTNER
THE SAVERA
OUR BUSINESS IS YOU
SUPPORTING ORGANIZATIONS
CULTURAL PARTNERS
JAPANFOUNDATION
Consulate-General of Japan Chennai
NFDC
TECC
EMBASSY OF BRAZIL
Alliance Française
Norwegian Film Institute
VENUE PARTNERS
DEVI, DEVI BALA
CASINO THEATRE
NFDC Tagore Theatre
PRESS RELATIONS
ONLINE TICKETING PARTNER
bookmyshow
MOVIE INFO PARTNER
MOVIEBUFF
Online KDM & DCP Delivery Service
QUBE
nithra
MADRAS TALKIES
DESIGN PARTNER
V.R.Graphics

Printed and Published by Indo Cine Appreciation Foundation Chennai - 600006